ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2424/81 - 2025 පෙබරවාරි මස 22 වැනි සෙනසුරාදා - 2025.02.22

2424/81 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பி. செ. தொடர் இல.: PTB/LND/ACQVI/07/48.
காணி அமைச்சின் இல.: 4-3/8/2020/CEB/06.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் பிட்டபெத்தர பிரதேச செயலாளர் பிரிவின் மொரவக்க தொகுதியின் வெலிவ கிராமத்தில் மஹகும்புர என்னும் காணியில் 820545 ஆம் கடஸ்திரல் வரைபடத்தில் 01 ஆம் தொகுதி இலக்க, 01 ஆம் இலக்க பத்திரத்தில் மாத்தறை நில அளவையாளர் அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்டு எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட MR/PTB/2023/353 ஆம் இலக்க மற்றும் 2024.11.12 ஆந் திகதிய கடஸ்திரல் வரைபடத்தில் 01 ஆம் மற்றும் 02 ஆம் இலக்க காணித்துண்டுகளுக்கான எல்லைகளின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 1 - காணியின் பெயர்: மஹகும்புர; விஸ்தீரணம்: 0.0018 ஹெக்டயார்**
வடக்கு: அ.க.பி. 10 இல் 204 ஆம் இலக்க காணித் துண்டு; கிழக்கு: அ.க.பி. 10 இல் 204 ஆம் இலக்க காணித்துண்டு; தெற்கு: 2 ஆம் இலக்க காணித் துண்டு; மேற்கு: அ.க.பி. 10 இல் 204 ஆம் இலக்க காணித்துண்டு.

02. **துண்டு இல. 2 - காணியின் பெயர்: மஹகும்புர; விஸ்தீரணம்: 0.0505 ஹெக்டயார்**
வடக்கு: அ.க.பி. 10 இல் 204 ஆம் இலக்க காணித் துண்டு மற்றும் இந்த நில அளவைப் படத்தின் 01 ஆம் இலக்க காணித்துண்டு; கிழக்கு: அ.க.பி. 10 இல் 204 ஆம் இலக்க காணித்துண்டு; தெற்கு: அ.க.பி. 10 இல்

204 ஆம் இலக்க காணித்துண்டு; மேற்கு: அ.க.பி. 10 இல் 204 ஆம் இலக்க காணித்துண்டு.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிடபெத்தர பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தீக்ஷண திசாநாயக்க,
பிரதேச செயலாளர் (பதில்),
பிட்டபெத்தர.

பிரதேச செயலகம்,
பிட்டபெத்தர,
2025, பெப்புருவரி 19.

EOG 02 - 0214